செ.வெ.எண்: 46 நாள்:27.06.2020

# பத்திரிக்கைச் செய்தி

இந்திய அரசின் சார்பில் 2020 ஆம் ஆண்டிற்கான டென்சிங் நார்கே தேசிய சாகச விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதுகுறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும், நிலம், கடல் மற்றும் வான் ஆகியவற்றில் சாதனைகள் பெற்ற நபர்களுக்கு இந்திய அரசின் சார்பில் 2020 ஆம் ஆண்டிற்கான டென்சிங் நார்கே தேசிய சாகச விருதுகள் வழங்கி கௌரவித்து வருகிறது.

இவ்விருதிற்கான விண்ணப்பம் படிவம் மற்றும் இதர விவரங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளமான (www.sdat.tn.gov.in ) லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தகுதியான விண்ணப்பங்களை மாவட்ட விளையாட்டு அலுவலர் மாவட்ட விளையாட்டு அரங்கம், கரூர் என்ற முகவரிக்கு வரும் 29.06.2020 தேதி மாலை 5.00 மணிக்குள் சமர்பிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரை 7401703493 என்ற போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.